**ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு செயற்திட்டம் - (றக்வான – சூரியகந்த) 2022**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு செயற்திட்டத்தின் (றக்வான – சூரியகந்த) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டமானது 2019 சனவரி 01 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுலப்படுத்தப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சப்ரகமுவ மாகாணத்தில் றக்வானயில் ஆரம்பிக்கும் 130.6 கிமீ மற்றும் சூரியகந்தையில் முடிவடையும் 112.6 கிமீ இலங்கையிலுள்ள ஏ017 வீதி நடைபாதையின் 18 கிமீ ஐ புனரமைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிக்க எதிர்பார்த்து இணைப்பு மற்றும் அணுகுமுறையினை மேம்டுத்தல் மற்றும் இலங்கையில் பொது சமுக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோளாகும். இச் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமானது இணைப்பு மற்றும் அணுகல்தன்மையை மேம்படுத்துவதாகும், இது பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் என்றும் இலங்கையின் பொதுவான சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடைபாதையானது இரண்டு பக்கங்களிலும் கடினமான மற்றும் மிருதுவன ஓரங்களுடன் (shoulders) ஓர் இரண்டு பக்க நெடுஞ்சாலையாக (10.0 m) வடிவமைக்கப்படும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,947.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50.54 மில்லியனானதுடன் அதில் ரூபா 5,497.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. கடன் உடன்படிக்கையானது 2019 ஒக்தோபர் 30 இல் கைச்சாத்திடப்பட்டு 2023 செப்தெம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண செயற்பாடுகள் தாமதத்துடன் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணவளிப்பு செய்யப்பட்ட ரூபா 320.47 மில்லியன் தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய தேறிய காசும், நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசும் முறையே அந்தத் தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | 320.47 | இணங்கப்பட்டது. குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் அதற்கேற்ப வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | பொதி ஏ மற்றும் பொதி பீ இன் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டியவைகளிற்கான ஏற்பாடு ரூபா 85.40 மில்லியனாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக ரூபா 95.80 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நடைமுறை வேலை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | 10.4 | இணங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மேலதிக நிதியேற்பாடு சீர்செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |

### 2.2 தீர்க்கப்படாத மீதிகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 31.90 மில்லியன் தொகையான செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டுநிதி கிடைக்காதமை அந்த சூழ்நிலையை முக்கியமாக பாதிக்கிறது. | 31.90 | 1 ஆண்டிற்கு மேற்பட்டது. | இணங்கப்பட்டது. GOSL கூறின் கீழ் போதுமான கட்டுநிதி பெறப்படவில்லை. | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| சிவில் நிர்மாணம் வேலைகள் | | 40 | 11 | செயற்திட்டத்தின் சிவில் நிர்மாணச் செயற்பாடுகள் பெறுகை செயன்முறைகளில் ஏற்பட்ட தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 04 வருடங்கள் கடந்த பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டக் காலப்பகுதியினுள் செயற்திட்டச் செயற்பாடுகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.<br><br>காணி சுவீகரிப்பில் தாமதம்.<br><br>நன்கொடையாளர் இணக்கப்பாட்டை பெறுவதில் தாமதம் |

**முகாமைத்துவத்தின் பதில்**

இணங்கப்படவில்லை.
2020.05.18 இல் கொவிட் - 19 அவசர உதவி நடவடிக்கைகளுக்கு கடன் தொகையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எனவே, பெறுகை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த சூழ்நிலையின் காரணமாக காணி சுவீகரிப்பு மற்றும் ஏனைய நிறுவனங்களின் அங்கீகாரங்கள் போன்ற ஏனைய நடவடிக்கைகள் மெதுவாகவே மேற்கொள்ளப்பட்டன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் கடன் வசதி செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 3 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் 18 கிமீ வீதிப் புனரமைப்புப் பணிகளைத் தொடங்குவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. எனினும், பெறுகை செயன்முறையில் தாமதம் காரணமாக ஒப்பந்தப் பொதி (சீ) இன் கீழான | இணங்கப்பட்டது. மேலே உள்ள உருப்படி 4.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் பொதி (சீ) தொடங்கப்படும் திகதி தாமதமாகியதுடன் செயற்திட்டம் | பெறுகை செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணிகள் மீளாய்வாண்டில் தொடங்கப்பட்டிருக்கவில்லை. இது செயற்திட்டத்தின் நிர்மாணக் கிரயத்தை மீறுவதற்கு வழிவகுக்கும். | தொடங்கப்படும் திகதி 2022.12.27 ஆகும். | |

### 3.3 மனித வள முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| ஏழு செயற்திட்டங்களுக்கு பதவியணியினர் ஒதுக்கப்பட்டுள்ளதால், இந்த செயற்திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் கணக்காய்வின் போது தனித்தனியாக இனங்காணப்பட முடியாதிருந்தன. இதன் விளைவாக, இந்த நிலைமை செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மோசமாகப் பாதித்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. இச் செயற்திட்டத்திற்கு தனியான பதவியணி கோரப்பட்டதுடன் இன்னும் அங்கீகாரம் பெறப்படவில்லை. | செயற்திட்ட பதவியணிக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக 1515 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டம் 789 காணித்துண்டுகளிற்காக 38(அ) பிரிவை மாத்திரமே வெளியிட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 வரை 17 ஆம் பிரிவின் கீழ் எந்தவொரு காணித்துண்டுகளிற்கும் இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. காணி சுவீகரிப்பு செயன்முறையின் மோசமான மேற்பார்வை முக்கியமாக தாமதத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியதுடன் இது எதிர்காலத்தில் செயற்திட்டக் கிரயம் மீறப்படுவதை மோசமாக பாதிக்கலாம். | இணங்கப்பட்டது. நாட்டில் கொவிட் காலப்பகுதியில் நிலவும் சூழ்நிலை காரணமாக சுவீகரிப்பு செயன்முறை தாமதமாகியது. | காணி சுவீகரித்தல் செயன்முறையை விரைவுபடுத்தப்பட்டு, பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் இழப்பீடு மதிப்பிடப்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 325.17 மில்லியன் மற்றும் ரூபா 70 மில்லியன் தொகையான ஒதுக்கீடு முறையே வெளிநாட்டு கடன் மற்றும் GOSL கூறின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. எனினும், GOSL ஒதுக்கீட்டின் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 7.24 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் மோசமான முன்னேற்றம் காரணமாக முழு வெளிநாட்டு கடன் ஒதுக்கீடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | GOSL கூறின் கீழ் போதுமான கட்டுநிதி பெறப்படவில்லை; எனவே, GOSL ஒதுக்கீட்டில் 10 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | செயற்திட்ட நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடத்தின் 1வது தளத்தில் ஏழு செயற்திட்ட அலுவலகங்கள் இயங்கி வந்த போதிலும் இந்த ஏழு செயற்திட்டங்களுக்கும் நியாயமான முறையில் கட்டிட வாடகை பங்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் முழுக் கட்டிடத்திற்கும் ரூபா 1,020,000 வாடகையை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | இணங்கப்பட்டது. நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் 07 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்கான கட்டுநிதி மற்றும் ஒதுக்கீட்டின் கிடைப்பனவுத் தன்மையைப் பொறுத்துத் தொகை அறவிடப்படுகிறது. | நியாயமான முறையில் வாடகையை பங்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |